**பேராதனை பல்கலைக்கழகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது

நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டின் மூலதன செயற்திட்டங்கள் மற்றும் மீண்டெழும் செயற்திட்டங்களுக்காக கிடைத்த நிதி ஏற்பாடு தொகையை விஞ்சி செலவிடுவதன் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவிடப்படாத மூலதன மானியக் கணக்குகளில் (Unspent Capital Grant) ரூபா 277,256,481 ஆன வரவு மீதிகள் மற்றும் செலவிடப்படாத மூலதனச் சொத்துக்கள் மீளாய்வாண்டின் செயற்திட்ட கணக்குகளில் ரூபா 122,341,334 வரவு மீதிகள் காணப்பட்டன. | இவ்வரவு மீதியில் ரூபா 211,344,909 ஆன அட்டுறு செலவினம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவ்வாறே வனிரராக செய்யப்படும் செயற்திட்டங்களுக்காக தாமதமாக மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களின் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்ப்படுகின்றது. மேலும் திறைசேரயின் நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமையாலும் இந்நிலை ஏற்படுகின்றது. | மூலதன செயற்திட்டங்கள் மற்றும் மீண்டெழும் செயற்திட்டங்களுக்கான நிதிஏற்பாட்டு எல்லைக்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டின் சட்டரீதியான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைகேற்ப ஆண்டு இறுதியில் பெறப்பட்ட மூலதன மானியங்கள் ரூபா 226,507,866 இற்கான தொகை இணங்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | இவ்விணக்கமின்மை கணக்கீட்டு நியமம் 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சட்டரீதியான அறிக்கையாக இருப்பதுடன் அதன் மூலம் நிதிக் கூற்றுக்களுக்கு தாக்கமொன்று ஏற்படுவதிலலை. | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் அனைத்து தரவுகளும் சரியாக இருக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இன் நிலவரப்படி புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளின் பெறுமானத்தேய்வு ரூபா 31,466,128 ஆல் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது. | 2020 இன் கணக்குகளை தயாரிக்கும் போது இக்குறைபாடுகள் சீராக்கம் செய்யப்படும். | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அனைத்து பெறுமானங்களும் சரியானதென உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஈ) | மீளாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய பல்கலைக்கழகங்களிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட 09 ஊழியர்களின் கடன் நிலுவை ரூ 1,165,933 தொகையை கையேற்பதற்கு 03 மாதங்கள் முதல் 20 மாதங்கள் வரை தாமதம் ஏற்பட்டுள்ளது. | ஊழியர்களிடமிருந்து மாதாந்தம் அறவிடும் கடன் தவணைகளை பயன்படுத்தி புதிய கடன் வழங்குதல் மற்றும் இடமாற்றம் பெற்று வரும் உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை கையேற்பதற்கு நேர்ந்துள்ளது. எதிர்வரும் 03 மாதங்களில் கையேற்க நடவடிக்கை எடுக்கப்படும் | இடமாற்றம் பெற்று வரும் உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 1.5.3 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தின் முகவரியின் கீழ் எவ்வித அனுமதி இன்றி வெளித்தரப்பினரால் பீடத்தின் கால்நடை மருத்துவமனையை மேம்படுத்துவதற்காக என குறிப்பிட்டு 2014 ஜூன் 6 ஆம் திகதி இலங்கை வங்கியின் பேராதனைக் கிளையில் சேமிப்புக் கணக்கொன்று திறக்கப்பட்டு 2019 யூன் 04 ஆந் திகதி வரை ரூபா 2,606,324 சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 2,065,613 தொகை மீள பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. பீடத்தின் ஒசுசலா வெளித்தரப்பினருக்கு வழங்கி மாதமொன்றுக்கு ரூபா 15,000 பெறப்பட்டிருந்த போதும் எஞ்சிய பணப் பெறுவனவு எந்த வகையில் என்பது தொடர்பான தகவல்களைப் பெற முடியவில்லை. | இச்சேமிப்புக் கணக்கு தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது டன் இதற்காக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை 2020 யூலை மாதம் நடைபெறும் கட்டுப்பாட்டு சபைக்க சர்ப்பிக்கப்பட உள்ளது. அதன் பிரகாரம ச்பவம் தொடர்பான உரியவர்களுக்கு எதிராக நடலசெ்கைள் எடுக்கப்பட உள்ளன. | இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதற்கும் புலனாய்வு அறிக்கையின் பிரகாரம் துரிதமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |

## 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பல்கலைக்கழகத்திற் குரிய அரச விடுதிகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிட வேண்டிய வீட்டு வாடகை, நீர் மின்சாரக் கட்டணங்கள்நடைமுறைக் கணக்குகளுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் | 1,388,803 | நிதிக்கூற்றுக்களுடன் காலப்பகுப்பாய்வு | நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமை காரணமாக உரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பித்தலில் தாமதம் ஏற்பட்டது. | நிதிக்கூற்றுக்களு டன் காலப்பகுப்பாய்வு ஒன்று சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணை மீறிய 15 தொடக்கம் 30 ஆண்டுகளாக அறவிடப்படாத ரூபா 08 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 4,256,435 தொகை மற்றும் தற்போது சேவையிலுள்ள 2012 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,120,858 தொகையொன்று 2020 யூன் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 08 விரிவுரையாளர்களுக்காக பழைய பிணை முறிகளை மீறிய யவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதுடன் இந்நபர்கள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு விசாரணை காரணமாக சேமலாப நிதியத்தை அறவிடுவதற்கு தாமதமாக இருந்தது, தற்போது சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் பகுதி பகுதியாக அறவிடுவதற்காக கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் ஏனைய நிதியங்கள் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 206,488 ஆன 09 முற்பணங்கள் 20 ஆண்டு முதல் 29 ஆண்டுகள் வரை கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி மற்றும் நிதிய முற்பணங்கள் வங்கப்பட்டிருந்த விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து விலகிச் சென்றிருந்ததுடன் அவர்களின் சேமலாபத்தை விடுவிக்கும் போது இத்தொகை அறவிடப்பட உள்ளது. | நிலுவை மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 400,000 தொபை 07 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2007 ஒக்தோபர் 25 ஆந் திகதி தீவிபத்திற்கு உட்பட்ட CPNA வேன் வண்டிக்கு கிடைக்க வேண்டிய இப்பணத்தை நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் வழக்குப் பொருள் கம்பனிக்கு கையளிக்கப்பட்டு இக்காப்புறுதி பணத்தை பெற்றுக்கொள்ள உள்ளது. | அறவிட வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழகத்தின் 09 பீடங்களிலிருந்து 1980 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,334,341 ஆன மண்டபக் கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் 2 ஆண்டு முதல் 37 ஆண்டு காலம் கடந்திருந்த போதும் அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகைகளில் 2020 யூன் 17 ஆந் திகதி வரை மண்டபக் கட்டணங்கள் ரூபா 43,875 மற்றம் தண்டப்பணம் ரூபா 115,045 அறவிடப்பட்டிருந்தது. இந்நிலுவை தொகையை இந்நிலுவையை அறவடுவதற்கு மூன்றுபேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினால் எடுக்கப்படும் பரிந்துரையின் பேரில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) பல்கலைக்கழகத்தில் சேவை புரியும் 16 உத்தியோகத்தர்களிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,599,326 ஆன கடன்தொகை ஓய்வுபெறல், வேலை இடைநிறுத்தம் இராஜினாமா, கேட்டு விலகல் மற்றும் ஒழுக்காற்று பரிசோதனை மேற்கொள்ளல் அடிப்பயில் மீளாய்வாண்டில் அறவிட வேண்டியிருந்தது. | இந்த உத்தியோகத்தர்களின் சேமலாப நிதியம் விடுவிக்கப்படாமையால் எதிர்வரும் காலத்தில் அக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணம் 387 | காசோலை மூலமான கொடுப்பனவுகளுக்கும் வங்கி மீதி போதுமானதா என்பதை தொடர்ந்து ஆராய்ந்து பார்க்க வேண்டிய போதிலும் அரச வங்கியில் பேணிச் செல்லும் நடைமுறைக் கணக்கில் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 294,798 ஆன மீதியொன்று காணப்பட்டது. | 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 294,798 ஆன மீதியொன்று காணப்பட்ட போதும் வங்கிக் கணக்கில் செலவு மதிஒன்ற காணப்பட்டது. எதிர்வரும் காலத்தில் கொடுப்பனவு செய்யும் போது காசு மீதியின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதாக குறித்துக் கொள்கின்றேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |
| (ஆ) நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்ட போதும் னொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்த 05 வங்கிக் கணக்குகளில் ரூபா 759,806 பெறுமதியான 60 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டில் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது, சுற்றறிக்கைக்கு இணங்காமல் ரூபா 2,307,389 பெறுமதியான 79 காசோலைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவர்று வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் செல்லு படிக்காலம் முடிவடைந்த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| (இ) நிதிப்பிரமாணம் 571 | காலாவதியான அனைத்து வைப்புத்தொகைகளும் அரசாங்கத்தின் வருவாய்க்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும் 02 முதல் 07 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் காணப்பட்ட இருந்து ரூபா 2,205,095 கேள்வி வைப்பு மற்றும் ரூபா 410,750 உடற்கல்வி பிரிவின் திருப்பிச் செலுத்தக்கூடிய வைப்புத்தொகை தொடர்பான நிதி பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இவ்வைப்புக்கள் *JE / REV / 20/01* ஆம் இலக்க பதிவின் கீழ் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |
| (உ) 2016 மார்ச் 01 ஆந் திகதிய 06/2014 ஆம் இலக்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சுற்றறிக்கையின் | | | |
| (i) 2 ஆம் பிரிவு | அனைத்து சுய நிதி (Self Financing Activities)நடவடிக்கைக ளும் செலவு மீட்பு கொள்கை (Cost Recovery) மற்றும் இலாப நோக்கற்ற (Non Profi;t Basis)அடிப்படையில் செயல்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு 13 நடவடிக்கைககளின் மொத்தம் ரூபா 52,158,154 தொகை நிதி மிகையொன்று பெறப்பட்டன. | இச்செயற்பாடு சுயநிதியிடல் நிதி செயற்பாடக செயற்படாமல் இல்லாமல் இருந்ததுடன் அதற்குரிய ரூபா 52,158,154 தேறிய நிதி மிகை தொடர்பாக கலந்துரையாடி எதிர்காலத்தில் செயற்படுவதற்கு நடடிக்கை எடுக்கப்படும். | சுயநிதியிடல் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 5 ஆம் பிரிவு | 16 சுய நிதியிடல் செயற்பாடுகள் (Self Financing Activities) மூலம் அபிவிருததி செலவின விடயங்களுக்காக (Devolopment Vote) மேற்கொள்ளப்பட வேண்டிய ஆகக்குறைந்த பங்களிப்பு தொடர்பாக பல்கலைககழக நிர்வாக | 03 செயற்பாடுகளில் ஆண்டின் இறுதியில் மீதிகள் இலலாமல் இருந்ததுடன் 16 சுய நிதியிடல் செயற்பாடுகள் மூலம் அபிவிருத்தி செலவின விடயங்களுக்காக பங்களிப்பு வழங்கப்படாமல . இருந்ததுடன் | சுய நிதியிடல் செயற்பாடுகள் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபையால் தீர்மானிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாமல் இருந்தமையால் சுற்றறிக்கையின் பிரகாரம் அபிவிருத்தி செலவின விடயங்களுக்காக இச்செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பங்களிப்பு வெளிப்படுத்த முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பாக கலந்துரையாடி பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தே.க.ஆ.நி. மற்றும் 2011 பெப்ரவரி28 ஆந் திகதிய 2011/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | பல்கலைக்கழகத்தினால் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை செயற்படுத்தியுள்ள ரூபா 3,133,688,743 ஆன 22 சிறிய மற்றும் நடுத்தர நிர்மாணங்கள் தொடர்பாக கட்டிட ஆராய்ச்சி நிலையத்தின் தகைமை சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சகல நிர்மாணங்களுக்காக இந்த அறிக்கையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணத்திற்குரிய சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டும் |
| (எ) | 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23(உ) பிரிவு | பல்கலைக்கழக வளவில் உள்ள 600 மாணவர்களுக்கு மேற்பட்ட தங்குமிட வசதிகள் கூடிய சில்வா ஒபேசேகர விடுதியின் சிற்றுண்டிச்சாலை மூலமும் கலை மற்றும் விஞ்ஞான ப்பீடத்தின் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை களிலிருந்தும் கழிவுநீர் நேரடியாக மஹவலி கங்கையுடன் சேர்ந்திருந்தது. | தற்போது சில்வா ஒபேசேகர விடுதியின் சிற்றுண்டிச்சாலையின் கழிவு நீர வெளியேற்றல் தொடர்ான நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மூலமும் கலைப்பீடத்தின் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைகளின் கழிவுகளை வெளியேற்றுதல் முறைம எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்பட உள்ளது. | கழிவுப்பொருள் வெளியேற்றல் உரிய சுகாதார நியதிகளுக்க இணங்க மேற்கொள்ள வேண்டும். |
| (ஏ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | அனைத்து மிகை நிதிகளை மற்றும் நிதி அமைச்சரின் முன்அங்கீகாரத்தின் பேரில் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தின் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 203,218,324 தொகையொன்று | 2019 ஆ் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிலையான வைப்புக்களுக்காக நிதி அமைச்சரின் முன் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8 ஆம் அத்தியாயத்தின் 11 ஆம் பிரிவு | பேராதனை பல்கலைக்கழகத்தின் ஒப்பந்தத்தை தவிர்ப்புச் செய்த ஒப்பந்தக் காரர்களின் 2 ஒப்பநதக்காரர்கள் கறுப்பு பட்டியலில் இடப்படால் மீண்டும் மீண்டும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | இவ்விரண்டு வொப்பந்தக்காரர்களால் ஆரம்பிக்கப்பட்டிருந்த 03 நிர்மண செயற்திட்டங்களின் இறுதி பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அந்த ஒப்பந்தக்காரர்களினால் ஒப்பந்த செயற்பாடுகளில் தவிர்ப்புச் செய்யவில்லையென குறிப்பிடலாம் | பெறுகை வழிகாட்டல் கோவையின் உரிய நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 99 (இ) பிரிவு | பேராதனை பல்கலைக்கழக உடற் கல்வித் துறை பணிப்பாளரால் பேராதனை பல்கலைக்கழகத்தின் விளையாட்டுச் சங்கம் (Sport Council of the University of Peradeniya) என்ற பெயரில் சேமிப்பு வங்கி கணக்கு 2016 பெப்ரவரி 18 அன்று பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் கிளையில் திறக்கப்பட்டுள்ளது. அந்த திகதியிலிருந்து கணக்காய்வு திகதியான 2019 ஜூலை 5 வரை, ரூபா 3,250,115.50 செலவு வைக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை பல்கலைக்கழகத்திற்கு வரவு வைக்காமல் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தன. | இது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை 2020 யூலை மாதம் நடைபெறும் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளதுடன் அதன் பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் . | இவ்வாறான நிலைமையொன்று மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கும் தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மேம்படுத்துவதற்குக் புலனாய்வு அறிக்கையின் பிரகாரம உரிய நபர்களுக்கு எதராக விரைவில் நடவடிக்கை எடுப்பதற்கு தேவைான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,788,913,770 ஆன பற்றாக்குறையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 632,788,598 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,156,125,172 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த குறைவிற்கு மஹபொல மானியங்களுக்காக கிடைத்த நிதி குறைவு, பரீட்சைக்கட்டண வருமானங்கள் குறைவடைந்தமை, தனிப்பட்ட படிகள் செலவின அதிகரிப்பு, வழங்கல் சேவைகள் செலவினம் அதிகிர்த்தமை, உடன்படிக்கை சேவை செலவினங்கள் அதிகிரிப்பு மற்றும் பெறுமானத்தேய்வுச் செலவினம் அதிகரிப்பு பிரதான காரணங்களாக இருந்தன.
மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2015 ஆம் ஆண்டில் மாத்திரம் மிகையாக இருந்ததுடன் ஏனைய ஆண்டுகளில் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. அவ்வாறே 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2019 ஆம் ஆண்டின் நிதி விளைவுகளின் பற்றாக்குறை 182 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பொறியியல் வடிவமைப்பு நிர்மாண நிலையத்தின் கீழ் கடந்த 03 ஆண்டுகளில் 07 வெளித்தரப்பினருக்கு நிர்மாணம் தொடர்பான மதியுரை சேவைகள் வழங்கியிருந்த போதும் பல்கலைக்கழகத்தின் 11 நிர்மாண வேலைகளுக்காக வெளித் தரப்பினர்களிடம் இருந்து சேவைகள் பெற்று அதற்காக ரூபா 93,829,364 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் போது மதியுரை சேவைகளை பொறியியல் வடிவமைப்பு நிர்மாண நிலையத்திடமிருந்து போட்டி முறைமையின் கீழ் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படலாம | பல்கலைக்கழகத்தின் நிரமாண செயற்திட்டங்களுக்காக பொறியியல் வடிவமைப்பு நிர்மாண நிலையத்திடமருந்து மதியுரை சேவைகளை பெற்றுக்கொள்ள முறையான நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 68,270,171 தொகையான 37 மீண்டெழும் செயற்திட்டங் களுக்குரிய ஆரம்ப வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொண்டு அல்லது ஒப்பந்தக்காரருக்கு வழங்கிய கடிதங்கள் (Awading Letters) வழங்கியிருக்கையில் செயற்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | மதிப்பீடு திருத்தம், மீண்டும் தயாரித்தல், பிரதானிகளின் தேவைகள் அவ்வவ்போது மாறுதல் மாணவர்கள், எதிர்ப்புக்கள், வேலை நிறுத்தங்கள், மற்றும் நில ஒப்பந்தக்காரருக்கு விடுவிக்காமை போன்ற காரணங்களின் பேரில் ஒப்பந்தம் வழங்கிய தாமதம் காரணமாக விலை விலகல் ஏற்படுவதால் செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | திட்டமிடப்பட்டவற்றுடன் நிர்மாணங்களை ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்காக 2010 மார்ச் முதல் 2014 பெப்ரவரி வரையான காலப்பகுதிக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்தாமை காரணமாக பல்கலைக்கழக நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை 2020 யூலை மாதம் நடைபெறும் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட உள்ளதுடன் அதன் பிரகாரம் குறித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டரீதியான கொடுப்பனவுகளை உரிய திகதியில் வழங்குவதற்கும் உரிய சம்பவங்கள் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்திற்காக உயர்கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்பட்டிருந்த 06 விடுதிகளின் முதலாவது நிர்மாணத்தின் போது உத்தியோகத்தர்கள் போதியளவான மேற்பார்வை செய்யாமை. எல்லையை மிகைத்து மாணவர்களை அனுமதிப்பதற்கு தீர்மானித்தமை மற்றும் காணப்படும் மின்சார முறைமை தொடர்பாக முறையான ஆய்வு மேற்கொள்ளாமையால் மின் முறைமையை ரூபா 14,736,760 செலவில் மீண்டும் ஸ்தாபிக்க நேர்ந்தது. | இந்த விடுதிகளின் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீடுகள் அனைத்தும் உயர்கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்பார்வை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பத்தில் ஒரு அறைக்கு இரண்டு மாணவர்கள் என திட்டமிடப்பட்டிருந்த போதும், பின்னர் விடுதியில் மாணவர் எண்ணிக்கையை இரண்டு மடங்காக மாற்றுவதற்கு தீர்மானித்தமையால் மின்முறைமையின் இயலளவும் இரண்டு மடங்காக நேர்ந்தது. | பல்கலைக்கழகத்தின் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நிர்மாணங்களும் போதியளவு மதிப்பீடொன்றுடனும் மேற்பார்வை மூலம் மாத்திரம் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 25 ஏக்கருக்கு மேற்பட்ட காணி பகுதியொன்று 1997 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதியான 2020 யூன் வரை கங்கவட்ட கோரளை பிரதேச சபைக்கு உடமைகொண்டிருந்த போதும் அந்த ஆதனங்கள் தொடர்பாக எவ்வித குத்தகையொன்றும் அறவிடுவதற்கு அல்லது மீண்டும் உடமையை பல்கலைக்கழகத்திற்கு பொறுப்பேற்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணி 1997 ஆம் ஆண்டின் பின்னர் பிரதேச சபைக்கு மூலம் உடன்படிக்கை மேற்கொள்ளப்படவில்லை. எனினும் அண்மைக்காலமாக பிரதேச சபை அனுமதியற்ற வகையல் காணியல் நுழைந்து வியாபார கூடமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அதற்கு எதிராக பல்கலைக் கழகத்தினால் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான வெளித்தரப்பினரால் முறைநயற்ற வகையில் உடமை கொண்டுள்ள ஆதனங்களை விரைவில் கையேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி விபரங்களின் பிரகாரம் | 2019 ஆம் அண்டில் தனியார் துறையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு | வேலை உதவியாளர்களுக்கு திட்டவட்டமான வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட 635 வேலை உதவியாளர்களுக்கு இடையே 614 வேலை உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டு பல்கலைக்கழகத்தின் 125 வேலை பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டு அவர்களுக்கு 8797 மேலதிக வேலை மணித்தியாலங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எனினும், 2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தினால் தனியார் துறையின் ஆரோக்கிய மற்றும் சுத்திகரிப்பு வேலைகளுக்காக 375 நபர்களின் சேவை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 116,349,252 பெறுமதியான ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர வேலை உதவி பதவியணிக்கு முறைப்படி கடமைகளை கையளிக்காமை, ஊழியர் இணைப்பின் வேறுபாடுகள் போன்ற பலவீனங்கள் காரணமாக தனியார் துறையில் சேவைகள் பெற்றுக்கொள்ள நேர்ந்தது. | சேவைகள் 20 சதவீதம் வரை குறைக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டிலிருந்து 07 மாணவர் விடுதிகள் தவிர சுத்திகரிப்பு சேவைகளை வழங்காமல் இருக்க தீர்மானிக்கப்பட்டது. எனினும் தற்போது சேவை புரியும் வேலை உதவியாளர்களின் தொழில் விபரிப்பில் அக்கடமைகளையும் உள்ளடக்குமாறு அனைத்து பீடாதிபதிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | அவர்களின் கடமைகள் மேற்பார்வை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 1972 ஆம் இலக்க திட்டவரைபடக் காணியின் 04 துண்டுகள் 1987 முதல 2014 திசெம்பர் 31 வரை 30 ஆண்டு காலத்திற்கு மலைநாட்டு உழவர் திணைக்களத்திற்கு குத்தகைக்கு வழங்கியிருந்த போதும், அக்காலப்பகுதிக்கு அறவிட வேண்டிய ரூபா 6,590,000 ஆன குத்தகை பணத்தை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கும் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதும் காணியின் உரித்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2016 திசெம்பர் 31 இல் பல்கலைக்கழகத்திற்கு குத்தகைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 6,580,000 ஆன பணத்தை செலுத்துவதை தவிர்ப்புச் செய்யப்பட்டுள்ளது தற்போது கட்டிடத்தின் ஒரு பகுதி பல்கலைக்கழகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்கள் குழுவினால் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | அறவிட பணத்தை அறவிடுவதற்கும் காணிகளின் உடமையை கையேற்பதற்கும் தேவையானநடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2019/2020 கல்வியாண்டிற்காக புதிய மாணவர்களை அனுமதித்ததன் பின்னர் செயற்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு வேலை திட்டத்திற்காக கட்டுப்பாட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தாமல் கட்டுப்பாட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்தாமல் நாளொன்றுக்கு ரூபா 7,000 தொகைக்கு 03 மாதங்களுக்காக தனியார் | நாளொன்றுக்கு ரூபா 7,000 செலுத்தி வாகனத்தை பயன்படுத்துதல் ஆக்கபூர்வமானதல்ல என ஏற்றுக் கொள்வதுடன் இக்கடமைகளுக்காக பல்கலைக்கழகத்தின் வாகனங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். மேலும் | அரசின் பணத்தை செயறதிறனாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்த வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | துறையிடமிருந்து வாகனமொன்று பெற்றுக்கொண்டு அதற்காக ரூபா 469,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>பல்கலைக்கழகத்தில் வாகனங்கள் காணப்பட்ட சந்தர்ப்பத்திலும் பல்கலைக்கழகத்தினால் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலும் இவ்வாகனத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் வார இறுதி நாட்களில் வாகனம் சாரதி இன்மையால் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக கல்வி பதவியணியினரின் ஒழுக்கம் மற்றும் கல்விப் பொறுப்பு தொடர்பான வழிகாட்டல் கோவையின் 5 ஆம் பிரிவிற்கு முரணாக பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பீடத்தின் முன்னால் பீடாதிபதி ஒருவரால் தமது மகளுக்கு M.phi பட்டப்பின் படிப்பினை வழங்கும் போது அதன் பரிசோதனை செயற்பாடுகளுக்கும் பரீட்சை செயற்பாடுகளும் அவரினால் மேற்பார்வை செய்யப்பட்டு 2016 யூலை 12 ஆந் திகதி பட்டத்தை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தார். | இருதரப்பு உறவினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இதன் பின்னர் அவ்வாறான தொடர்பொன்றாக விடயங்கள் கணடறயப்பட்டால் பின்பற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை பட்டப்பின் படிப்பு கைநூலுக்கும் உப விதிகளுக்கும் உள்ளடக்கப்படும். | உரிய வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்னகாக முறையான வேலைத் திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் உரிய எதிர்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும் |
| (ஆ) | பிணை மீறிய 15 - 30 ஆண்டுகள் கடந்துள்ள 62 விரிவுரையாளர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 23,347,468 தொகை அவ்விரிவுரையாளர்களுடன் எவ்வித கடித தொடர்பொன்றையும் மேற்கொள்ள முடியாமை மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்க முடியாமை காரணமாக பல்கலைக்கழக நிர்வாக சபையால் நியமிக்கப்பட்ட உப குழுவினால் (Sub Committee) அறவிட முடியாதென புத்தகங்களிலிருந்து பதிவழக்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. | இப்பிணை முறி மிகவும் பழையதாக இருப்பதுடன் அறவிடுவதற்கு மாற்று வழி இல்லையென்பதால் அதன் காரணமாக இப்பிணை முறி பெறுமானத்தை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சின் ஊடாக குழுவொன்று நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பிணை முறி மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 நிதிய குறைப்பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் செயற்பாட்டு நிலைமையில் காணப்படாத மற்றும் மீளாய்வாண்டின் போது போதியளவு கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளாத ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 47,160,650 தொகையான 32 சுயநிதியிடல் (Self financing) நிதியங்கள் குறைப்பயன்பாட்டில் காணப்பட்டது. | மீளாய்வாண்டின் போதியளவு கொடுக்கல் வாங்கலாக மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள் காணப்பட்ட போதும் இச்செயற்பாடுகளுக்குரிய மீதிகள் எதிர்காலத்தில் நோக்கத்திற்கு உட்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதால் மேலும் பேணிச் செல்லப்படுகின்றது. | குறைப்பயன்பாட்டில் காணப்பட்ட சுயநிதியிடல் நிதியங்களை விரைவில் பயன்படுத்துவதற்கு அல்லது வேறு பயனுள்ள விடயங்களுக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 09 பீடங்களின் உடன்படிக்கை மீறிய விரிவுரையாளர் களிடமிருந்து அறவிடப்படும் பணத்தை முதலீடு செய்து அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தை பயன்படுத்தி பேணிச் செல்லும் 09 கணக்கு நிதியங்களின் கூட்டுத்தொகை ரூபா 39,460,912 தொகையில் மீளாய்வாண்டில் 7 நிதியங்களிலிருந்து எவ்வித செலினமும் மேற் கொள்ளாமையையால் நிதியம் குறைப்பயன்பாட்டில் காணப்பட்டது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 737 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஏனைய விடயங்களுக்கு பணத்தை செலவிடுவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு 2019 யூன் 21 ஆந் திகதிய கடிதங்கள் மூலம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. | குறைப்பயன்பாட்டில் காணப்பட்ட நிதியங்களை விரைவில் பயன்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தபட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகத்தின் தொலக்கல்வி மற்றும் தொடர் கல்வி கேந்திரத்திற்கு முகாமைத்துவ தகவல் முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்காக 2015 திசெம்பர் 15 ஆந் திகதி ரூபா 3,500,000 தொகைக்கு வெளித்தரப்பினருடன் உடன்படிக்கை செய்யப்பட்டு அதில் ரூபா 740,000 தொகை செலுத்தி 03 ஆண்டுகள் கடந்திருந்த போதும் குறித்த பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | இது தொடர்பாக 2019 நவம்பர் 01 ஆந் திகதி கூடிய பல்கலைக்கழக நிர்வாக சபையின் பிரகாரம் 2020 பெப்ரவரி 06 ஆந் திகதி குறித்த நிறுவனத்துடன் நடாத்தப்பட்ட கலந்து ரையாடலின் பிரகாரம் இத்தகவல்கள் முறைமையை மீண்டும் பூர்த்தி செய்வதற்கு இணங்கப்பட்டிருந்தது. தற்போது அதன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் வேலைத் திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2,762,449,213 ஆன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 18 மூலதனச் செயற்திட்டங்கள் மற்றும் ரூபா 1,339,926,823 தொகையான 70 மீண்டெழும் செயற்திட்டங்கள் என்பவற்றுடன் கூடிய மொத்தம் ரூபா 4,102,376,036 தொகையான 88 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வந்தன. எனினும் அதற்காக வேலைத் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்ட தொழில்நுட்ப பதவியணியின் 14 பேராக இருந்தும் அந்நிர்மாணங்களின் மேற்பார்வை போதியளவில் மேற்கொள்ளப்படாமல் இருந்தது. | வேலைத் திணைக்களத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட இரண்டு தொழில் உத்தியோகத்தர்கள் மற்றும் வேலை நிர்வாகி பதவிகள் வெற்றிடங்களாக இருந்தன. எதிர்காலத்தில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு உள்ளதுடன் அதன் பிறகு சகல செயற்பாடுகளையும் முறையாக மேற் கொள்வதற்கு இயலுமாக உள்ளது. | நிர்மாண கைத்தொழில்களின் மேற்பார்வை படிப்படியாக மேற் கொள்வதற்காக வெற்றிடங்கள் விரைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | விரிவான கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமல் பல்கலைக்கழகத்தின் வேலைத் திணைக்களம் 2019 யூன் மாதம் வரை 06 மாதங்களுக்குள் ரூபா 57,004,881 பெறுமதியான 1572 வேலைகள் (Direct Labor) செயற்படுத்தப்பட்டிருந்தன. | தற்போது காணப்படும் மனித மற்றும் பௌதீக வளங்களைப் பயன்படுத்தி ரூபா 50,000 இற்கு மேற்பட்ட பராமரிப்பு வேலைகள் மாத்திரம் முன் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் | விரிவான கிரய மதிப்பீட்டுடன் மாத்திரம் நிர்மாணங்களை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 சனவரி 25 ஆந் திகதி வரையில் ரூபா 944,826,576 பெறுதியான 12 நிர்மாணச் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டபடி பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போன காரணத்தினால் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டங்களில் காணப்பட்ட வெவ்வேறு சிக்கலான நிலைமைகள் காரணமாக பயன்படுத்து வதற்கு முடியாமல் இருந்தது. எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணச் செயற்திட்டங்கள் திட்டங்களின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கும் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.7 பதவியணியினர் நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் நிபுணத்துவ வகைக்குரியதல்லாத 279 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது இல்லாமல் ஆக்க மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அறிக்கையில் காணப்படும் தகவல்களுக்கு இடையே 2020 யூன் 01 இல் உள்ளவாறு காணப்பட்ட வெற்றிடங்களின் கூட்டுத்தொகை 229 ஆக இருந்தது. கல்விசாரா ஊழியர்களின் வேலை இடைநிறுத்தம், தேர்தல் அறிவிக்கப்பட்டமை மற்றும் கொரோனா தொற்று நிலைமை அடிப்படையில் தொடர்ந்தும் ஆட்சேர்ப்பதற்கு முடியாமல் இருந்தது. | உரிய சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடங்களாக உள்ள செயற்திட்ட முகாமயாளர்கள், மின் பொறியியலாளர்கள் மற்றும் உயிர் பாதுகாப்பாளர் (நீச்சல் தடாகம்) ஆகிய பதவிகள் முறையே 04 வருடங்கள், 02 வருடங்கள் மற்றும் 01 ஆண்டு காலப்பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | உயிர் பாதுகாப்பாளர் நீச்சல் தடாக பதவி 2017 இன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் பதிவேட்டின் பிரகாரம் ஒப்பந்த பதவியொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் நிரந்தர ஊழியர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்ய முடியாதிருந்தது. அவ்வாறு செயற்திட்ட முகாமையாளர்கள் பதவிகளுக்காக பொருத்தமான நபர்கள் இல்லாமல் இருந்தமையால் 2016 மே 02 ஆந் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் மின் பொறியியலாளர்கள் பதவிகள் 2017 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று அங்கீகரிக்கப்படாமையால் தற்போது அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |